(ஆ) உலக அமைதிக்குப் பங்கம் ஏற்படுவது குறித்து.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, உலக அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டிருக்கிற ஒரு பயங்கரமான நிலைமை உருவாகி இருக்கிறது. ஆகவே அதைப்பற்றி....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது இன்னொரு நாட்டுப் பிரச்சினை. அதுவும் நம் நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்கும் உள்ள பிரச்சினை அல்ல. வேறு இரு நாடுகளுக்கிடையே உள்ள பிரச்சினை. அதைப்பற்றி பாராளுமன்றம் பார்த்துக்கொள்ளும்.

* *

திரு. துரை முத்துசாமி : * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது இங்கு எழுப்பப்பட வேண்டிய பிரச்னை அல்ல.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதை குறிப்பேட்டி லிருந்து நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரை முத்துச்சாமி அவர்களின் கேள்வியை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விட உத்தர விடுகிறேன்.

(இ) சேப்பாக்கம் தொகுதியில் பொதுக்கூட்டம் நடத்த அனுமதிப்பது குறித்து.

திரு. அ. ரகுமான்கான் : பாயின்ட் ஆப் ஆர்டர். தங்கள் மூலம் இந்த அரசின் கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். சேப்பாக்கம் தொகுதியில் கடந்த பல நாட்கள் ஆக பொதுக்கூட்டங்கள் நடத்த முடியாததொரு சூழ்நிலை இருக்கிறது. காரணம், அரசு ஆணை பிறப்பித்து அதன் காரண மாக தடங்கல் ஏற்பட்டிருக்கிறது. முன்பெல்லாம் காவல் நிலயத்தின் அனுமதி வாங்கவேண்டும்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிற வாய்ப்பிருக்கிறது. அவர்களிடம் கொடுத்து விளக்கமாகப் பேசலாம், இது ஒழுங்குப் பிரச்னையின் கீழ் வராது. உங்கள் உணர்வுகளைச் சொல்லிவிட்டீர்கள், அது அப்படியேயிருக்கட்டும்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.